தினமணி

## குறைந்த வாடகையில் வேளாண் உபகரணங்கள்

First Published : 08 May 2012 08:31:32 AM IST

காஞ்சிபுரம், மே 7: கூட்டுறவு சங்கங்களில் குறைந்த வாடகையில் வேளாண் உபகரணங்கள் கிடைக்கின்றன என்று கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் வெ. திருநாவுக்கரசு தெரிவித்தார்.

லத்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட பொய்கை நல்லூர் கிராமத்தில் உழவர் பெருவிழா அண்மையில் நடந்தது. விழாவுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் இ. குருமூர்த்தி தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் வெ.திருநாவுக்கரசு பேசியது:

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக அக்ரி கிளினிக் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பயிர் செய்வதற்கு ஏதுவாக மண் பரிசோதனை, நீர் பரிசோதனை செய்து அதற்கேற்ப பயிர்களுக்கு உரமிட்டு குறைந்த செலவில் நிறைந்த மகசூல் பெற வாய்ப்புள்ளது.

அதேபோல் மாவட்டத்தில் 70 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் வேளாண் சேவை மையங்கள் தொடங்கப்பட்டுள்ளது. வேளாண் பணிகளுக்கு தொழிலாளர்கள் கிடைக்காத இக்காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களில், நெல் நடவு இயந்திரம், களை எடுக்கும் கருவி, நாற்று வளர்க்கும் கருவி, நாற்று வளர்க்கும் டிரே, டிராக்டர், உழவுக் கருவி, நெல் அறுவடை இயந்திரம் போன்ற நவீன வேளாண் கருவிகள் வாங்கி வைக்கப்பட்டுள்ளன. இவை விவசாயிகளுக்கு மிகக் குறைந்த வாடகையில் விடப்படுகிறது. இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் திருநாவுக்கரசு.

விழாவில் நவீன வேளாண் இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. மதுராந்தகம் சரக துணைப்பதிவாளர் டி. உஷா, பவுஞ்சூர் வேளாண் உதவி இயக்குநர் சி. ஏழுமலை, மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் பாபு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## "நவீன முறை விவசாயத்தில் லாபம் அடையலாம்'

First Published : 08 May 2012 08:29:40 AM IST

கும்மிடிப்பூண்டி, மே. 7: நவீன அறிவியல் முறையை விவசாயத்தில் பயன்படுத்தினால் விவசாயிகள் நல்ல வாபத்தை அடைந்து பொருளாதார ரீதியாக வாழ்வில் முன்னேற முடியும் என கும்மிடிப்பூண்டி அடுத்த பல்லவாடா பகுதியில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

கும்மிடிப்பூண்டி அடுத்த பல்லவாடா ஊராட்சியில் தமிழக முதல்வரின் அறிவிப்பின்படி உழவர் பெருவிழா பல்லவாடா ஊராட்சி மன்றத் தலைவர் ரமேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) அசோகன், தோட்டக்கலை உதவி இயக்குநர் ராமலிங்கம், கும்மிடிப்பூண்டி வட்டார வேளாண்மை அலுவலர் பி.சேகர், உதவி அலுவலர் ஆத்மா, சிவகுமார், மாதர்பாக்கம் வேளாண் விரிவாக்க மைய மேலாளர் திருநாவுக்கரசு உட்பட அரசு வேளாண், தோட்டக்கலை, மீன்வளத்துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

விழாவில் விவசாயிகளுக்கு வேளாண் துறையில் அரசு வழங்கும் மானியங்கள், சொட்டு நீர் பாசனம், உயிர் உரங்களின் பயன்பாடுகள், விவசாய நிலங்களில் மண் வளத்தை ஆய்வு செய்து மண்ணின் வளத்தை மேம்படுத்துதல், விவசாய துறையில் அரசு வழங்கும் மானியங்கள், வேளாண்மை துறை சார்பாக மானிய விலையில் விற்கப்படும் நவீன வேளாண் கருவிகள் போன்றவை குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

மேலும் வேளாண், தோட்டக்கலை துறையினரின் வழிகாட்டுதலின்படி நவீன அறிவியல் முறையை விவசாயத்தில் கையாண்டால் விவசாயத்தில் நல்ல லாபத்தை விவசாயிகள் காணலாம் என அதிகாரிகள் அறிவுறுத்தினர்.

முடிவில் விவசாயிகளுக்கு அரசின் சார்பாக அளிக்கப்படும் விருந்து வழங்கப்பட்டது.

விழாவில் ஒன்றியக் கவுன்சிலர் முத்துசாமி மற்றும் பல்லவாடா ஊராட்சி மன்ற துணைத் தலைவர், வார்டு உறுப்பினர்கள், அ.தி.மு.க-வினர் திரளாக கலந்துகொண்டனர்.

**கண்ணீரில் கரும்பு விவசாயிகள்**

என். முருகவேல்

First Published : 08 May 2012 05:09:11 AM IST



ஆலைக்கு கொண்டு செல்ல முடியாததால் சாலையோரம் கடும் வெயிலில் வாடி வதங்கும் கரும்புகள்

நெய்வேலி: கூட்டுறவு சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தால் குறிப்பிட்ட காலத்துக்குள் அறுவடை செய்யவேண்டிய கரும்புகள் வெட்டப்படாததால் அவை கருகுவதைக் கண்டு, பயிரிட்ட விவசாயிகள் கண்ணீருடன் மாற்றுவழித் தெரியாமல் தவிக்கின்றனர்.

கடலூர் மாவட்டத்தில் காவிரி டெல்டா பாசன விவசாயப் பகுதியான சிதம்பரம் வட்டத்தைச் சார்ந்த காட்டுமன்னார் கோயில், கம்மாபுரம், சிதம்பரம், விழுப்புரம் மாவட்டத்தில் சில பகுதிகளில் சுமார் 40 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் கரும்பு பயிரிடப்படுகிறது.

கடலூர் மாவட்டத்தில் சேத்தியாத்தோப்பு அருகே உள்ள எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலை மட்டுமே இயங்கிவருகிறது. இவற்றைத் தவிர பெண்ணாடம், நெல்லிக்குப்பம் பகுதிகளில் தனியார் சர்க்கரை ஆலைகள் இயங்கிவருகின்றன. விழுப்புரம் மாவட்டத்தில் 4 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இயங்கிவருகின்றன.

தமிழகத்தில் 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், ஊதிய உயர்வு உள்ளிட்டக் கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த ஒருமாத காலமாக போராடிவருகின்றனர். ஆனால் போராட்டம் தீர்ந்தபாடில்லை.

இந்நிலையில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை நம்பி பயிர்செய்த விவசாயிகள் பயிரிட்ட கரும்பை குறித்த காலத்துக்குள் அறுவடை செய்து அவற்றை சர்க்கரை ஆலைகளுக்கு கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கரும்புகள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது.

கூட்டுறவு வங்கிகளில் கடன் வாங்கி பயிரிட்ட விவசாயிகள் வட்டி அதிகரிப்பதால் என்ன செய்வது என்று விழிபிதுங்கி நிற்கின்றனர்.

சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களின் போராட்டம் நீடித்துவருவதால் கரும்பை வெட்ட முடியாத விரக்தியடைந்த தஞ்சையைச் சேர்ந்த விவசாயி ஒருவர், தான் பயிர்வித்த கரும்பை தீவைத்துக் கொளுத்தியுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் திட்டமிட்டு இப்போராட்டம் நடைபெறுவதால், பாதிக்கப்படுபவர்கள் கரும்பு விவசாயிகள்தான். தமிழக கரும்பு விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர்.

இதேநிலை நீடித்தால் கரும்பு விவசாயிகள் எதிர்காலத்தில் கரும்பு பயிரிடுவதை தவிர்க்கவேண்டிய நிலை ஏற்பட்டு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை மூடவேண்டிய சூழல் ஏற்படும். இந்த நிலையை சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களும் அரசும் புரிந்துகொண்டு, மாற்று வழிகளை ஆராய்ந்து கரும்பு விதைப் பயிர் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரவேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## ஆலைகள் அதிக நிலுவை வைத்துள்ள போதிலும் கரும்பு பயிரிடுவதில் விவசாயிகளுக்கு அதிக ஆர்வம்

மே 08,2012,00:30



புதுடில்லி;சர்க்கரை ஆலைகள் 10 ஆயிரம் கோடி ரூபாய் பாக்கி வைத்துள்ள போதிலும், கரும்பு பயிரிடுவதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கரும்பு கொள்முதல் விலை உயரும் என்ற எதிர்பார்ப்பு, சர்க்கரை ஏற்றுமதிக்கான தடை நீக்கம்

மற்றும் சர்க்கரைக்கான தேவை அதிகரிக்கும் என்ற மதிப்பீடு ஆகியவையே இதற்கு முக்கிய காரணம் என இத்துறை சார்ந்தவர்கள் தெரிவித்தனர்.

உத்தரபிரதேசம்:சர்க்கரை உற்பத்தியில் மகாராஷ்ட்ரா முதலிடத்தில் உள்ள போதிலும், கரும்பு பயிரிடும் பரப்பளவில் உத்தர பிரதேசம் முதலிடத்தில் உள்ளது. நாட்டின் மொத்த கரும்பு பயிரிடும் பரப்பளவில், உத்தர பிரதேசத்தின் பங்களிப்பு, 50 சதவீதத்தை நெருங்கியுள்ளது.

இம்மாநிலத்தில், கடந்த 2010-11ம் சர்க்கரை பருவத்தில் (அக்.,-செப்.,) 22.70 லட்சம் ஹெக்டேர் பரப்பில் கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. இது, நடப்பு 2011-12ம் சர்க்கரை பருவத்தில், சென்ற 2ம் தேதி நிலவரப்படி 90 ஆயிரம் ஹெக்டேர் அதிகரித்து 23.70 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது.உத்தர பிரதேச சர்க்கரை ஆலைகள், கரும்பு விவசாயிகளுக்கு 4,500 கோடி ரூபாய் பாக்கி வைத்துள்ள நிலையிலும், கரும்பு பயிரிடும் பரப்பளவு அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு:அது போன்று தமிழ்நாடு, ஆந்திரா, பீகார் மாநிலங்களிலும், கரும்பு பயிரிடும் பரப்பளவு அதிகரித்துள்ளது. ஒட்டு மொத்த அளவில், நாட்டின் கரும்பு பயிரிடும் பரப்பளவு, நடப்பு மே மாதம் 2ம் தேதி நிலவரப்படி, 48.61 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இது, சென்ற பருவத்தின் இதே காலத்தில், 47.61 லட்சம் ஹெக்டேராக இருந்தது.மதிப்பீட்டு காலத்தில், தமிழகத்தில் கரும்பு பயிரிடும் பரப்பளவு 21 சதவீதம் உயர்ந்து, 3.73 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது. பீகாரில், கரும்பு பயிரிடும் பரப்பளவு 8.5 சதவீதம் அதிகரித்துள்ளது.

அதே சமயம், கர்நாடகா மற்றும் மகாராஷ்ட்ராவில் கரும்பு பயிரிடும் பரப்பளவு குறைந்துள்ளது. கர்நாடகாவில், கரும்பு பயிரிடும் பரப்பளவு 11.6 சதவீதம் சரிவடைந்து 3.80 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது. அது போன்று, மகாராஷ்ட்ராவில், கரும்பு பயிரிடும் பரப்பளவு, 1 சதவீதம் சரிவடைந்துள்ளது.கரும்பு அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளதால், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, தொடர்ந்து நான்காவது ஆண்டாக உபரி என்ற நிலைக்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்து மூன்று ஆண்டுகளாக, சர்க்கரை உற்பத்தி, நாட்டின் தேவையை விட அதிகமாகவே உற்பத்தியாகி உள்ளது.

நடப்பு 2011-12ம் சர்க்கரை பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.60 கோடி டன்னாக உயர்ந்து, புதிய சாதனை படைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதே சமயம், நாட்டின் சர்க்கரை தேவை 2.20 கோடி டன் என்ற அளவிற்கு இருக்கும் என்று மத்திய வேளாண் அமைச்சகம் கணித்துள்ளது.சரியும்:இந்நிலையில், இந்தியாவின் சர்க்கரை உற்பத்தி குறையும் என சர்வதேச சர்க்கரை கழகம் மதிப்பிட்டுள்ளது. சுழற்சி அடிப்படையிலான பயிரிடும் முறை மற்றும் ஆலைகள் வைத்துள்ள பாக்கி போன்றவற்றால் கரும்பு பயிரிடும் பரப்பளவும் சர்க்கரை உற்பத்தியும் குறையும் என இக்கழகம் தெரிவித்துள்ளது. இதன்படி, வரும் 2012-13ம் சர்க்கரை பருவத்தில், இந்தியாவின் சர்க்கரை உற்பத்தி, நடப்பாண்டை விட 5 சதவீதம் குறைந்து 2.45 கோடி டன்னாக சரியும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மதிப்பீடு:எனினும், தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் சம்மேளனம், வரும் சர்க்கரை

பருவத்தில், இந்தியாவின் சர்க்கரை உற்பத்தி 2.50 கோடி டன்னாக இருக்கும் என தெரிவித்துள்ளது.ஆனால், வரும் 2012-13ம் சர்க்கரை பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி குறித்த மதிப்பீட்டை, இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் இன்னும் வெளியிடவில்லை.மத்திய அரசு, சர்க்கரை ஏற்றுமதிக்கான கட்டுப்பாடுகளை நீக்கியுள்ளதால், அதன் தேவை உயரும். இதனால் கரும்பு, சர்க்கரை உற்பத்தி அதிகரித்து, சர்க்கரை ஆலைகள், விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

## பாமாயில் சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் : மானியம் வழங்கி அரசு ஊக்குவிப்பு

பதிவு செய்த நாள் : மே 08,2012,02:43 IST

கருத்தை பதிவு செய்ய

சின்னசேலம்: கள்ளகுறிச்சி சுற்றுவட்டார பகுதி விவசாயிகள் எண்ணெய் பனை சாகுபடி (பாமாயில் பழ மரங்கள்) செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். விவசாய ஆட்கள் பற்றாக்குறை, செலவு அதிகமின்றி கூடுதல் வருமானம், அரசின் ஊக்குவிப்பு ஆகியவற்றால் பாமாயில் பயிரிடுவோர் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது.விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி பகுதியில் எண்ணெய் பனை சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். ஏக்கருக்கு செலவுபோக 30,000 ரூ௫பய் வருமானம், சாகுபடியை மேம்படுத்தும் வகையில் வேளாண் துறை மூலம் ஹெக்டேருக்கு 7,150 மதிப்புள்ள எண்ணெய் பனை கன்றுகள் இலவசமாக வழங்குவது, பராமரிப்பு செலவுக்காக நான்கு ஆண்டுகளுக்கு 15,500 ரூபாய், சொட்டு நீர் பாசனத்திற்கு 10,000 ரூபாய் மான்யம், மண் புழு வளர்ப்புக்கு 15,000 ரூபாய், மண் புழு உர அலகு தயார் செய்ய 15,000, மின் மோட்டாருக்கு 10,000 ரூபாயும் தகுதியுள்ள விவசாயிகளுக்கு ஆழ்துளை கிணறு அமைக்க 50,000 ரூபாய் வழங்கி வருகிறது.இதனால் கள்ளக்குறிச்சி சுற்றுப்புற பகுதிகளான ஏமப்பேர், எடுத்தவாய்நத்தம், கீழ் நாரியப்பனூர், கரடி சித்தூர், வீரசோழபுரம், தியாகதுருகம், ரிஷிவந்தியம், சின்னசேலம் பகுதியில் வீரபயங்கரம், தகரை, தொட்டியம், ராயர்பாளையம், உலகங்காத்தான், நமசிவாயபுரம், தென்செட்டியந்தல், பைத்தந்துறை, குரால், பாக்கம்பாடி உள்ளிட்ட பகுதிகளில் 200 ஏக்கருக்கு மேல் எண்ணெய் பனை சாகுபடி (பாமாயில் பழ மரங்கள்) பயிரிடப்பட்டுள்ளது.முதல் மூன்று ஆண்டுகளுக்கு கரும்பு, வேர்கடலை, உளுந்து, மக்கா சோளம், மரவள்ளி, வாழை, மஞ்சள், சூரியகாந்தி ஆகிய பயிர்களை ஊடு பயிரிடலாம். மற்ற பயிர்களைவிட பராமரிப்பு செலவு குறைவு, வேலை ஆட்கள் தேவை குறைவு, விற்பனை சிரமும் இல்லாமல் பழக்குலைகளை காவேரி பாமாயில் நிறுவனம் ஒப்பந்த முறையில் அரசு நிர்ணயித்த விலையில் கொள்முதல் செய்து வருகிறது. இதுபோன்ற காரணங்களால் ஆண்டு தோறும் எண்ணெய் பனை சாகுபடி செய்யும் விவசாயிகள் எண்ணிக்கை கனிசமாக உயர்ந்து

வருகிறது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு வெறும் 15 ஏக்கர் மட்டுமே பயிர் செய்யப்பட்டிருந்த நிலையில் இந்த ஆண்டு 300 ஏக்கருக்குமேல் சாகுபடி செய்யும் நிலை உருவாகியுள்ளது.பாமாயில் பழக்குலைகள் டன் ஒன்றுக்கு 4,500 ரூபாய் முதல் 7,500 ரூபாய் வரை அரசு விலை நிர்ணயித்துள்ளது. இதனால் கடந்த ஆண்டு இப்பகுதியில் சுமார் 1,500 டன் வரை கொள்முதல் செய்யப்பட்டது. கள்ளக்குறிச்சி பகுதி முழுவதும் கரும்பு உள்ளிட்ட பல்வேறு பயிர்களை செய்யும் விவசாயிகளும் எண்ணெய் பனை சாகுபடிக்கு மாறி வருகின்றனர்.

## சொட்டு நீர் பாசன முறையில் மிளகாய் விளைச்சல் அமோகம்

பதிவு செய்த நாள் : மே 08,2012,03:48 IST

கருத்தை பதிவு செய்ய

விழுப்புரம்:பிடாகம் கிராமத்தில் சொட்டு நீர் பாசனத்தில் பயிரிட்டுள்ள மிளகாய் அமோகமாக விளைச்சல் கண்டுள்ளதாக விவசாயி தெரிவித்துள்ளார்.விழுப்புரம் அடுத்த பிடாகம் கிராமத்தை சேர்ந்த அறிவழகன்,40. விவசாயியான இவர் தனது நிலத்தில் ஒரு ஏக்கர் பரப்பளவில் சொட்டு நீர் பாசனத்தில் மிளகாய் பயிர் செய்துள்ளார். இந்த பயிர் தற்போது அமோகமாக விளைச்சல் கண்டு, அறுவடை செய்யப்பட்டு வருகிறது.இது குறித்து விவசாயி அறிவழகன் கூறியதாவது:சொட்டு நீர் பாசனத்தில் கடந்த ஜனவரி மாதம் எனது நிலத்தில் ஒரு ஏக்கர் பரப்பளவில் மிளகாய் பயிர் செய்துள்ளேன். ஒன்பது மாத பயிரான மிளகாய் சாகுபடி செய்வதற்கு கூலி ஆட்கள் மற்றும் உரமிடுவதற்கான செலவு மிககுறைந்தளவே உள்ளது. இந்த பயிர் நடவு செய்த 60 நாட்களிலிருந்து அறுவடைக்கு தயாராகும், என்பதால் வாரம் ஒருமுறை பூச்சுகள் தாக்காத அள விற்கு தடுப்பு மருந்துகளை செடியின் மீது தெளிக்க வேண்டும்.

தற்போது மார்க்கெட் பகுதிகளில் மிளகாய் விற்பனையின்போது டன் ஒன்றுக்கு 14 ஆயிரம் ரூபாய் கொடுத்து வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். கடந்த இரண்டு மாதத்தில் இதுவரையில் எனது நிலத்தில் உள்ள மிளகாய் தோட்டத்தில் 4 முறை அறுவடை செய்துள்ளேன். இதில் 12 டன் விற்பனை செய்துள்ளதால் நான் செய்த முதலீட்டை விட அதிகளவு லாபம் ஈட்டியுள்ளேன். சொட்டு நீர் பாசனத்தில் மிளகாய் பயிரிட்டுள்ளதால் மிளகாய் சாகுபடி அதிகமாக கிடைத்துள்ளது.தோட்டத்தில் விளையும் மிளகாயை பறித்து விழுப்புரம், புதுச்சேரி, பண்ருட்டி உட்பட பல் வேறு பகுதிகளில் உள்ள மார்க்கெட்டில் விற்பனை செய்து வருகிறேன். சொட்டு நீர் பாசனத்தில் மிளகாய் பயிர் செய்ததில் அதிகம் சாகுபடி மற்றும் லாபம் கிடைத்துள்ளது. இது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக விவசாயி அறிவழகன் உற்சாகத் துடன் தெரிவித்தார்.

## பாமாயில் சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம்

பதிவு செய்த நாள் : மே 08,2012,03:48 IST

கருத்தை பதிவு செய்ய

சின்னசேலம்:கள்ளகுறிச்சி சுற்றுவட்டார பகுதி விவசாயிகள் எண்ணெய் பனை சாகுபடி (பாமாயில் பழ மரங்கள்) செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். விவசாய ஆட்கள் பற்றாக்குறை, செலவு அதிகமின்றி கூடுதல் வருமானம், அரசின் ஊக்குவிப்பு ஆகியவற்றால் பாமாயில் பயிரிடுவோர் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது.விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி பகுதியில் எண்ணெய் பனை சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். ஏக்கருக்கு செலவுபோக 30,000 ரூ0பய் வருமானம், சாகுபடியை மேம்படுத்தும் வகையில் வேளாண் துறை மூலம் ஹெக்டேருக்கு 7,150 மதிப்புள்ள எண்ணெய் பனை கன்றுகள் இலவசமாக வழங்குவது, பராமரிப்பு செலவுக்காக நான்கு ஆண்டுகளுக்கு 15,500 ரூபாய், சொட்டு நீர் பாசனத்திற்கு 10,000 ரூபாய் மான்யம், மண் புழு வளர்ப்புக்கு 15,000 ரூபாய், மண் புழு உர அலகு தயார் செய்ய 15,000, மின் மோட்டாருக்கு 10,000 ரூபாயும் தகுதியுள்ள விவசாயிகளுக்கு ஆழ்துளை கிணறு அமைக்க 50,000 ரூபாய் வழங்கி வருகிறது.

இதனால் கள்ளக்குறிச்சி சுற்றுப்புற பகுதிகளான ஏமப்பேர், எடுத்தவாய்நத்தம், கீழ் நாரியப்பனூர், கரடி சித்தூர், வீரசோழபுரம், தியாகதுருகம், ரிஷிவந்தியம், சின்னசேலம் பகுதியில் வீரபயங்கரம், தகரை, தொட்டியம், ராயர்பாளையம், உலகங்காத்தான், நமசிவாயபுரம், தென்செட்டியந்தல், பைத்தந்துறை, குரால், பாக்கம்பாடி உள்ளிட்ட பகுதிகளில் 200 ஏக்கருக்கு மேல் எண்ணெய் பனை சாகுபடி (பாமாயில் பழ மரங்கள்) பயிரிடப்பட்டுள்ளது.முதல் மூன்று ஆண்டுகளுக்கு கரும்பு, வேர்கடலை, உளுந்து, மக்கா சோளம், மரவள்ளி, வாழை, மஞ்சள், சூரியகாந்தி ஆகிய பயிர்களை ஊடு பயிரிடலாம். மற்ற பயிர்களைவிட பராமரிப்பு செலவு குறைவு, வேலை ஆட்கள் தேவை குறைவு, விற்பனை சிரமும் இல்லாமல் பழக்குலைகளை காவேரி பாமாயில் நிறுவனம் ஒப்பந்த முறையில் அரசு நிர்ணயித்த விலையில் கொள்முதல் செய்து வருகிறது. இதுபோன்ற காரணங்களால் ஆண்டு தோறும் எண்ணெய் பனை சாகுபடி செய்யும் விவசாயிகள் எண்ணிக்கை கனிசமாக உயர்ந்து வருகிறது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு வெறும் 15 ஏக்கர் மட்டுமே பயிர் செய்யப்பட்டிருந்த நிலையில் இந்த ஆண்டு 300 ஏக்கருக்குமேல் சாகுபடி செய்யும் நிலை உருவாகியுள்ளது.பாமாயில் பழக்குலைகள் டன் ஒன்றுக்கு 4,500 ரூபாய் முதல் 7,500 ரூபாய் வரை அரசு விலை நிர்ணயித்துள்ளது. இதனால் கடந்த ஆண்டு இப்பகுதியில் சுமார் 1,500 டன் வரை கொள்முதல் செய்யப்பட்டது. கள்ளக்குறிச்சி பகுதி முழுவதும் கரும்பு உள்ளிட்ட பல்வேறு பயிர்களை செய்யும் விவசாயிகளும் எண்ணெய் பனை சாகுபடிக்கு மாறி வருகின்றனர்.

### சூரியகாந்தி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

பதிவு செய்த நாள் : மே 07,2012,23:18 IST

கருத்தை பதிவு செய்ய

விழுப்புரம்:காணை பகுதியில் சூரிய காந்தி சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.எண்ணெய் வித்து பயிர்களில் சூரிய காந்தி முக்கிய இடம் பெற்று வருகின்றது. கொழுப்பு சத்து குறைவாக உள்ளதால் அனைவரும் சூரிய காந்தி எண்ணெய்யை சமையலுக்கு அதிகளவு பயன்படுத்துகின்றனர். உடல் ஆரோக்கியத்திற்கு சிறந்து உணவு எண்ணெய்யாகவும் சூரிய காந்தி உள்ளது. இதனால் கொலஸ்ட்ரால், ரத்த அழுத்தம் உள்ளிட்ட பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களும் இந்த எண்ணெய்யை சமையலுக்கு பயன்படுத்த துவங்கியுள்ளனர். இதனால் சூரிய காந்தி விதைகளுக்கு மார்க்கெட்டில் நல்ல விலையும் கிடைப்பதால், காணை ஒன்றியம் பெரும்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் சூரிய காந்தி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

### தேங்காய்கள் விலை வீழ்ச்சி

பதிவு செய்த நாள் : மே 08,2012,01:50 IST

நங்கவள்ளி:எண்ணெய் உற்பத்தி செய்யும் ஆலைகள், தேங்காயை குறைந்த விலைக்கு கொள்முதல் செய்வதால், வியாபாரிகள் அதிருப்தியடைந்துள்ளனர்.சேலம் மாவட்டம், நங்கவள்ளி, ஜலகண்டபுரம் சுற்றுப்பகுதியில், 30க்கும் மேற்பட்ட தேங்காய் மண்டிகள் உள்ளது. வட மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பும் தேங்காயில் மட்டைகளை எட்டு பிரிவாக உறிக்க வேண்டும். இதற்கு காலதாமதம் ஆவதுடன், கூலியும் குறைவு என்பதால் சமீபகாலமாக, தொழிலாளர்கள், கடை விற்பனைக்கான தேங்காயை உறிக்கச் சென்று விடுகின்றனர். இதனால், ஜலகண்டபுரம் சுற்றுப்பகுதியில் இருந்து வெளிமாநிலத்துக்கு விற்பனைக்காக தேங்காயை அனுப்பி வைப்பது குறைந்து விட்டது.

அதற்கு பதிலாக, வியாபாரிகள் மட்டை உரித்த தேங்காயை எண்ணெய் உற்பத்தி செய்யும் ஆலைகளுக்கு விற்பனைக்கு அனுப்புகின்றனர். தேங்காய் உற்பத்தி அதிகரிப்பு மற்றும் வரத்து அதிகரிப்பு காரணமாக, ஆலைகளிலும் தேங்காய் விலையை குறைத்து கொள்முதல் செய்கின்றனர்.கடந்த வாரம் ஒரு டன் தேங்காயை, 10 ஆயிரம் ரூபாய்க்கு கொள்முதல் செய்த ஆலைகள், இந்த வாரம், 9,200க்கு மட்டுமே கொள்முதல் செய்துள்ளன. ஒரு வாரத்தில் தேங்காய்

கொள்முதல் விலை டன்னுக்கு, 800 ரூபாய் வீழ்ச்சியடைந்ததால் தேங்காய் வியாபாரிகள் அதிருந்தியடைந்துள்ளனர்.

## ஈரோட்டில் பழங்கள் விலை கிலோவுக்கு ரூ.30 வரை உயர்வு

பதிவு செய்த நாள் : மே 08,2012,01:03 IST

ஈரோடு: ஈரோட்டில் கத்திரி வெயில் உக்கிரம் நாளுக்கு நாள் அதிகரிக்கும் நிலையில், பொதுமக்கள் கவனம் பழங்களின் பக்கம் திரும்பியுள்ளது. 30 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது. ஆந்திரா, கர்நாடகா, மத்தியபிரதேசம், கேரளாவில் இருந்து ஈரோட்டுக்கு பழங்கள் வரத்தாகின்றன. சீஸனுக்கு ஏற்றவாறு பழங்களின் வரத்தும் அதிகரிக்கும்.தற்போது, நிலவும் கோடைவெயிலின் தாக்கத்தில் இருந்து காத்துக்கொள்ள, எவ்வளவு விலை கொடுத்தும் பழங்களை வாங்கக்கூடிய நிலையில் பொதுமக்கள் தயாராக உள்ளனர். பழங்கள் விலை அதிகரித்துள்ள நிலையில், விலையும் கிடுகிடுவென அதிகரித்து வருகிறது.பெரும்பாலும் கோடையில் நீர்ச்சத்து மிகுந்த சாத்துக்குடி, ஆரஞ்சு போன்றவை அதிகமாக விற்பனையாகிறது. ஈரோட்டில் வெயில் அளவு தினசரி "சென்டம்' அடிக்கிறது.ஆந்திரா, கர்நாடகா பகுதியில் இருந்து வரும் இப்பழங்கள் கடந்த மாதம் கிலோ 45 ரூபாய்க்கு விற்றது, தற்போது 75 ரூபாய் வரை தரத்தின் அடிப்படையில் விற்பனையாகிறது. விலை இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.பன்னீர் திராட்சை சீஸன் முடிந்துள்ள நிலையில் கிலோ, 40 ரூபாய், மஸ்கட், சோனா திராட்சை, 60 முதல், 90 ரூபாய் வரை விற்கப்படுகிறது. காபூல் மாதுளை, 110 முதல், 140 ரூபாய், "சீட்லெஸ்' மாதுளை, 60ல் இருந்து, 80 ரூபாய் வரை விற்கப்படுகிறது.மாம்பழம் சீஸன் ஆரம்பித்துள்ள நிலையில், தரத்தின் அடிப்படையில் அதன் விலையும் கிலோ, 40 முதல், 80 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

## தேயிலை ஏலத்தில் வரத்து குறைந்தும் பயனில்லை

பதிவு செய்த நாள் : மே 08,2012,01:07 IST

கருத்தை பதிவு செய்ய

குன்னூர்: குன்னூர் தேயிலை ஏல மையத்தில், வரத்து குறைந்தும் விலையில் பெரிய அளவிலான முன்னேற்றம் தென்படவில்லை; கிலோவுக்கு 2 ரூபாய் விலை உயர்வு ஏற்பட்டது.குன்னூர் தேயிலை ஏல மையத்தில் விற்பனை எண் 18க்கான ஏலம் நடந்தது. மொத்தம் 9.61 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு இருந்தது. இதில், இலை ரகம் 6.86 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 2.79 லட்சம் கிலோ அடங்கும். வழக்கமாக பங்கெடுக்கும் ஆந்திரா, கர்னாடகா, ராஜஸ்தான், குஜராத்

உட்பட உள்நாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு ஓரளவு இருந்தது; அவர்கள் தரமான தேயிலை தூளை மட்டுமே வாங்கினர். ஏற்றுமதி வர்த்தகத்தில் பாகிஸ்தான், ரஷ்ய நாட்டு வர்த்தகர்கள் மட்டுமே பங்கெடுத்தனர். விற்பனைக்கு வந்த தேயிலை தூளில் 88 சதவீதம் விற்று தீர்ந்தது; கிலோவுக்கு 2 ரூபாய் விலை ஏற்றம் தென்பட்டது.விலை நிலவரத்தை பொறுத்தவரை சி.டி.சி., ரக தூளுக்கு அதிகபட்சம் விக்னேஷ்வர் தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு 187 ரூபாய், ஆர்தோடக்ஸ் ரகத்தில் அதிகபட்சம் சாம்ராஜ் தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு 245 ரூபாய் விலை கிடைத்தது. இலை ரக விற்பனையில், சாதாரண ரக தூளுக்கு 50 - 54 ரூபாய், சிறந்த ரக தூளுக்கு 95-157 ரூபாய் விலை கிடைத்தது. டஸ்ட் ரகத்தில், சாதாரண ரக தூளுக்கு 63 - 67 ரூபாய், சிறந்த ரகத்துக்கு 90-162 ரூபாய் விலை கிடைத்தது. விற்பனை எண் 19க்கான ஏலம் வரும் 10,11 தேதிகளில் நடக்கிறது. மொத்தம் 9.18 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.ஏல நிலவரம் இவ்வாறு இருப்பினும், விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலைக்கு ஓரளவு நல்ல விலை கிடைத்து வருகிறது. கடந்த வாரம் முதல் தர பசுந்தேயிலைக்கு கிலோவுக்கு 22 ரூபாய் விலை கிடைத்து வந்த நிலையில், இந்த வாரம் ஒரு ரூபாய் குறைந்து 21 ரூபாயாக இருந்தது. இரண்டாம் தர பசுந்தேயிலைக்கு 16, 17 ரூபாய், மூன்றாம் தர பசுந்தேயிலைக்கு 12 ரூபாய் விலை கிடைத்தது.

### சின்ன வெங்காயத்தை உடனே விற்க விவசாயிகளுக்கு அறிவுரை

பதிவு செய்த நாள் : மே 08,2012,02:05 IST

கருத்தை பதிவு செய்ய

கரூர்: "அறுவடை செய்யப்பட்டுள்ள சின்ன வெங்காயத்தை உடனே விற்பனை செய்தால் கூடுதல் லாபம் கிடைக்கும்' என வேளாண் பல்கலைகழக உள்நாடு மற்றும் வெளிநாடு ஏற்றுமதி சந்தை தகவல் மைய இயக்குநர் அஜ்ஜன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் உள்ளதாவது: கடந்தாண் டை விட சின்ன வெங்காயத்தி ன் உற்பத்தி பரப்பளவு மற்றும் சாகுபடி 30 சதவீதம் அதிகரித்து ள்ளது. கர்நாடகாவின் உற்பத்தி அடிப்படையில் தமிழ்நாட்டில் வெங்காய விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. தமிழகத்தில் மொத்த வெங்காய சாகுபடி பரப்பில் 24 சதவீதம் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ளது.

திருச்சி, திருப்பூர், திண்டுக்கல், திருநெல்வேலி, நாமக்கல், ஈரோடு, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் கோவையிலும் வெங்காயம் உற்பத்தி செய்யப்படுகிறது. அவற்றில் பெரம்பலூர், திருச்சி, திருப்பூர், திண்டுக்கல் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியில் 60 சதவீதத்திற்கும் மேல் பங்களிக்கிறது.

தற்போது கோவை, திருப்பூர் மாவட்டங்களில் இருந்து வெங்காயம் சந்தைக்கு வர தொடங்கியுள்ளது. இது செப்டம்பர் மாதம் வரை நீடிக்கும்.

விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க வசதியாக உள்நா ட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை த கவல் மையம் ஆராய்ந்து, கடந்த ஏப்ரல் மாதம் முதல் ஜூலை வரை முதல் தர வெங்காயம் ஒரு கிலோ 9 ரூபாய் முதல் 12 ரூபாய் வரையிலும், இரண்டாம் தரம் 7 ரூபாய் முதல் 9 ரூபாய் வ ரையிலும் இருக்கும் என கணித்துள்ளது. வரும் ஜூலை மாதத்துக்கு பிறகு வெங்காயத்தின் வி லை சற்று உயர வாய்ப்புள்ளது.

நாற்றுக்காக சின்ன வெங்காயத்தை சேமிக்கும் தன்மை குறைந்துள்ளது. மேலும், வெங்காய சேமிப்பால் ஏற்படும் இழப்பு, செலவுகளை கணக்கீடும் போது விலை அதிகரிப்பு சமமாக இருக்கும். சேமிப்பு அதிக நிகர லாபத்தை தர வாய்ப்பில்லாததால், விவசாயிகள் அறுவடை செய்த வெங்காயத்தை உடனே விற்பனை செய்து லாபம் அடையலாம்.

## முருங்கை சாகுபடி அதிகரிப்பு : விலை குறைவால் விவசாயிகள் சோகம்

பதிவு செய்த நாள் : மே 08,2012,02:05 IST

கருத்தை பதிவு செய்ய

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் முருங்கை சாகுபடி சூடுபிடிக்க தொடங்கியுள்ளது. வரத்து அதிகரிப்பால் முருங்கைக்கு விலை குறையும் என விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

கிருஷ்ணராயபுரம் தாலுகாவுக்குட்பட்ட பகுதிகளான சிவாயம், வயலூர், பாப்பக்காப்பட்டி, கருப்பத்தூர், பழைய ஜெயங்கொண்டம், பஞ்சப்பட்டி ஆகிய பகுதிகளில் முருங்கை காயை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். தற்போது முருங்கை பயிரிட்ட பகுதியில் கோடை மழை காரணமாக நிலத்தடி நீர் உயர்ந்து, முருங்கை பயிருக்கு தேவையான ஈரப்பதம் கிடைத்துள்ளது. ஏற்கனவே அரவக்குறிச்சி பகுதிகளில் பெய்த கோடை மழையால் முருங்கை சாகுபடி அதிகரித்துள்ளது. இந்த நிலையில், "கிருஷ்ணராயபுரம் பகுதிகளிலும் நடப்பாண்டு முருங்கை சாகுபடி அதிகரிக்க அதிகளவு வாய்ப்புள்ளதால் விலை குறையும்' என எதிர்பார்க்கப்படுகிறது. கோடைமழை காரணமாக திடீரென ஏற்படும் விலை குறைவால் முருங்கை விவசாயிகள் சோகத்தில் உள்ளனர்.

## கோடை மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் : மே 08,2012,02:12 IST

கந்தர்வக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை பகுதியில் கடந்த சில நாட்களாக கோடை மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

வழக்கத்தை விட இந்தாண்டு கடந்த பங்குனி மாதமே கோடை வெயில் கொளுத்த ஆரம்பித்து விட்டது. இந்த அக்னி வெய்யிலினால் மக்கள் வெப்பம் தாங்காமல் அம்மைநோய், தாவம்மை, உள்ளிட்ட பல்வேறு நோய்களினால் அவதிப்பட்டு வருகின்றனர்.
இதனால் இளநீர், நுங்கு போன்றவை விலை உயர்ந்தும் பொதுமக்கள் வாங்கி உண்டனர்.
மேலும், மின்வெட்டால் பகலிலும், இரவிலிலும் தூங்க முடியாமல் அவதிப்பட்டனர்.
மேலும், விவசாயிகள் மின்வெட்டினால் தாங்கள் விவசாயம் செய்த பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் கரும்பு, சோளம், வாழை, கடலை பயிர்கள் காய்ந்தது.
கந்தர்வக்கோட்டை பகுதியில் கோடைமழை சில நாட்களாக பெய்து விவசாயிகளை மகிழ்ச்சியடையச் செய்துள்ளது. கோடை வெப்பம் தணிந்து குளிர்ச்சியான காற்று வீசுவதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பால் உற்பத்தியை பெருக்கும் திட்டத்தில் விவசாயிகளுக்கு ஆர்வமில்லை

பதிவு செய்த நாள் : மே 07,2012,23:12 IST

பால் உற்பத்தியை பெருக்கும் திட்டத்தில் விவசாயிகளுக்கு ஆர்வமில்லை.பயனாளிகள் சேர்க்கையில் பின்னடைவு கொடைக்கானல்:பால் உற்பத்தியை பெருக்கும் அரசு திட்டத்தில், விவசாயிகளுக்கு ஆர்வம் இல்லாததால் பயனாளிகள் சேர்க்கையில் அதிகாரிகளுக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. கறவை மாடுகளின் பால் உற்பத்தியை பெருக்க, "தீவிர தீவன அபிவிருத்தி திட்டம்' அரசு செயல்படுத்தி வருகிறது. கலப்பு தீவனம், புல் வகைகளால் பால் உற்பத்தியில் பெரிதாக மாற்றம் ஏற்படவில்லை.
பால்தட்டுப்பாட்டால், வெளிச்சந்தையில் பாலின் விலை உயர்வையும் கட்டுப்படுத்த முடியவில்லை. தற்போது புதிதாக கோ- 4 என்ற புல்ரகத்தைவிவசாயிகள் பயிரிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. குறைந்த பட்சம் ஒரு ஏக்கரில் பயிரிட 15 ஆயிரம் ரூபாய் செலவாகும். இதில், 10 ஆயிரம் வரை மானியமாக வழங்கப்படுகிறது.
இதில் பயனாளியாக சேர, குறைந்தபட்சம் ஐந்து கறவை மாடுகள், சொந்த, குத்தை நிலத்திற்குரிய ஆவணங்கள் இருந்தால்போதும். ஆறு அடி உயரம் வளரும் இப்புல்லுக்கு தண்ணீர் பாய்ச்ச மானியவிலையில் நீர்தெளிப்பான், புல் அறுக்கும் கருவி தரப்படும்.
இவ்வளவு சலுகைகள் வழங்கப்பட்டும் மாடு வளர்ப்போர் மற்றும் விவசாயிகளிடம் இத்திட்டத்தை பயன்படுத்திக்கொள்ள போதிய விழிப்புணர்வு இல்லாத நிலை உள்ளது.
கால்நடை டாக்டர் ஒருவர் கூறியதாவது: எளிதில் ஜீரணமாகும் கோ-4 வகை புல்லால், பால் உற்பத்தி வழக்கமான அளவை விட இருமடங்கு அதிகரிக்கும். மாடுவளர்ப்போர், விவசாயிகளிடம் போதிய ஆர்வமில்லாததால், இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் சிக்கல் எழுந்துள்ளது, என்றார்.

தினத் தந்தி

# மொத்த விளைச்சலில், 6–18 சதவீத காய்கறி, பழங்கள் வீணாகின்றன



*ரிதுராஜ் திவாரி,புதுடெல்லி*

*மொத்த விளைச்சலில் ஆண்டுதோறும் 6 முதல் 18 சதவீத அளவிலான காய்கறிகள் மற்றும் பழங்கள் வீணாவதாக மத்திய உணவு பதப்படுத்துதல் துறைக்கான ராஜாங்க அமைச்சர் சரண் தாஸ் மாஹந்த் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.*

*இரண்டாவது இடம்*

*கடந்த 2010–11–ஆம் நிதி ஆண்டில் 7.49 கோடி டன் பழங்களும், 14.65 கோடி டன் காய்கறிகளையும் உற்பத்தி செய்துள்ள நம் நாடு, உலகில் இரண்டாவது இடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

*இருப்பினும், அண்மையில் வெளியான ஆய்வு முடிவுகளின்படி, அறுவடைக்குப் பின் வீணாகும் காய்கறிகள் மற்றும் பழங்கள் உள்ளிட்ட விவசாய விளைபொருள்களின் மதிப்பு ஆண்டுக்கு ரூ.44,000 கோடி என தெரியவந்துள்ளது.*

*இதனை தடுக்கும் விதமாக நாடு முழுவதும் குளிர் பதன சேமிப்பு கிடங்குகளை அமைத்து பராமரிப்பு பணிகளை மேற்கொள்வது முக்கிய திட்டமாக உள்ளது.*

*எனவே, காய்கறிகள் மற்றும் பழங்களை பதப்படுத்தி சேமிக்கும் நிறுவனங்களுக்கு தேசிய தோட்டக்கலை திட்டம், தேசிய தோட்டக்கலை வாரியம், விவசாயம் மற்றும் பதப்படுத்திய உணவுப் பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் மற்றும் தேசிய கூட்டுறவு மேம்பாட்டு கழகம் ஆகிய அமைப்புகள் நிதி உதவி வழங்கி வருகின்றன.*

*பரிந்துரை*

*இத்துறை சார்ந்த மத்திய பணிக்குழு, உணவு பதப்படுத்தும் நோக்கத்திற்காக அரசின் கடனுதவி பெற்றுள்ள நிறுவனங்களின் செயல்பாடுகளை கண்காணிக்க, 12–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில், தேசிய உணவு பதப்படுத்துதல் அமைப்பு ஒன்றை ஏற்படுத்த பரிந்துரை செய்துள்ளது.*

## குன்னூர் ஏல மையத்தில் 88 சதவீத தேயிலை தூள் விற்பனை

*குன்னூர், மே.8–*
*குன்னூர் ஏல மையத்தில் 88 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. மேலும் தேயிலை தூள் கிலோ ஒன்றுக்கு ரூ.2 வரை விலை உயர்வு கிடைத்தது.*
*தேயிலை தூள் ஏலம்*
*நீலகிரி மாவட்டத்தில் தேயிலை தொழில் பிரதான தொழிலாக இருந்து வருகிறது.*
*தென்னிந்தியாவில் உள்ள தேயிலை ஏல மையங்களில் குன்னூர் ஏல மையம் முக்கியத் துவம் பெறுகிறது. சிறு விவ சாயிகள் தங்கள் தோட்டங் களில் பறிக்கும் பச்சை தேயிலையை சிறு தேயிலை தொழிற்சாலைகளுக்கு வழங்கி வருகின்றனர்.*
*மாவட்டத்தில் உள்ள தனியார் தேயிலை தொழிற் சாலைகள் உற்பத்தி செய்யும் தேயிலை தூள் குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப் பின் மூலம் ஏலம் மூலம் விற் பனை செய்யப்படுகிறது.*
*வர்த்தகர்கள்*
*இந்த ஏலம் வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய இரு நாட்கள் நடத்தப்படுகின்றன. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர் கள் பங்குபெறுகின்றனர். விற்பனை எண் 18–க்கான ஏலம் கடந்த 3, 4 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.*
*ஏலத்திற்கு மொத்தம் 9 லட்சத்து 61 ஆயிரம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் 6 லட்சத்து 86 ஆயிரம் கிலோ தேயிலை தூள் இலை ரகமாகவும், 2 லட்சத்து 75 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.*
*விலை உயர்வு*
*ஏலத்தில் உள்நாட்டு வர்த் தகர்கள் மற்றும் வெளி நாட்டு வர்த்தகர்களான பாகிஸ்தான், ரஷ்யா ஆகிய நாட்டு வர்த்த கர்கள் அதிகளவில் பங்கேற்ற னர். இதனால் 88 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது.*
*ஏல மையத்தில் தேயிலை தூளுக்கு தேவை அதிகரித்த தால் அனைத்து ரக தேயிலை தூள்களுக்கும் கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய் வரை விலை உயர்ந்தது. சி.டி.சி. ரக தேயிலை தூள் 187 ரூபாய் அதிகபட்ச ரூபாயாக ஏலம் சென்றது.*
*இலை ரக தேயிலை தூள்*
*245 ரூபாய் என்பது ஆர்தோடக் ஸ்ரக தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலை யாக இருந்தது. சராசரி விலை யாக இலை ரக தேயிலை தூளின் சாதாரண வகை 50 ரூபாயில் இருந்து 54 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 95 ரூபாயில் இருந்து 157 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.*
*டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 64 ரூபாயில் இருந்து 67 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 90 ரூபாயில் இருந்து 162 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 19–க்கான ஏலம் வருகிற 10, 11 ஆகிய தேதிகளில் நடக்கிறது. ஏலத் திற்கு 9 லட்சத்து 18 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.*